## செய்தி வெளியீடு

செ.வெ.எண்.31 நாள் : 14.02.2025

**இன்று (14.02.2025) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே. என். நேரு அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.**

இன்று (14.02.2025) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் தலைமையில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை கலைவாணர் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது** :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களையும் அவர்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். நகர்ப்புரப் பகுதிகளில் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் குடிநீர் வசதிகள், கழிவுநீர் வசதிகள், சாலைகள் உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்களில் 70 சதவிகிதம் அளவிற்கு நகர்ப்புரப் பகுதிகளில் வசித்தும், நகர்ப்புரத்திற்கு வருகை தந்து செல்வதுமாகவும் இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகள் குறிப்பாக சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, மின்விளக்கு வசதிகள், பூங்காக்கள் பேருந்து நிறுத்தங்கள், சுகாதார சேவைகள், விளையாட்டுத் திடல்கள், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்புப் பணிகளும் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகளை அலுவலர்கள் தங்களது கடமைகளாகக் கொண்டு சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். தொடங்கிய திட்டப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். நீண்ட நாட்களாக நடைபெறுகின்ற திட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்கி பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். கோடை காலத்தில் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கிடும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சென்னையில் மழைநீர் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படாத வகையில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன .குறிப்பாக அதிக மழை பொழியும் போது மழைநீர் விரைந்து வடிந்து ஓடிடும் வகையில் மழைநீர் வடிகால்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போல மற்ற மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளிலும் சாலைகளில் தேவைப்படும் இடங்களில் வடிகால்கள் அமைக்கும் போது தகுந்த முன் திட்டத்தோடு அதனை

அமைத்திட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களும் நகர்ப்புரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. பணிகளில் ஏற்படும் தாமதத்தினைத் தவிர்த்திடும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலோசித்து பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

சட்டமன்ற வரவு செலவு திட்ட அறிக்கையில் நகராட்சி நிருவாகத்துறையின் சார்பில் என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உடனுக்குடன் செய்து தருவதற்கான நடவடிக்கைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தற்போதைய நிலவரம் குறித்தும், தாமதமாக நடைபெறும் பணிகளுக்கான காரணங்கள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து, அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். முன்னுரிமை பணிகளான சாலைகள், குடிநீர், கழிவுநீர், கழிவறை வசதிகள் மற்றும் மின் மயானம், அறிவுசார் மையங்கள், மார்க்கெட் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

40 ஆண்டுகளுக்கு பழமையான பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், மக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகம் செய்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும். மயான சாலைகளில் பல இடங்களில் சாலைகள் குறுகலாக உள்ளது. இதற்கு முன்னுரிமை தந்து சாலைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

2021-22, 2022-23, 2023-24 ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் பல இடங்களில் முடிக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளில் நீதிமன்ற வழக்குகள் இருந்தது. இந்த வழக்குகள் தற்போது முடிக்கப்பட்டு, அந்த இடங்களிலும் பணிகள் நடைபெற்று வருகிறது. அறிவிக்கப்பட்ட திட்டங்கள் 90 சதவிகிதம் அனைத்து இடங்களிலும் முடிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 10 சதவிகிதம் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. சாலைகள், மழைநீர் வடிகால்கள், பேருந்து நிறுத்தங்கள், மார்க்கெட் மற்றும் விரிவுப்படுத்தப்பட்ட நகராட்சிகளில் மக்களுக்கு தேவையான தண்ணீர் வழங்கிடும் வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள 134 நகராட்சிகள் மற்றும் 24 மாநகராட்சிகளில் கடந்த நான்கு வருடங்களில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரத் திட்டம், மூலதன மானிய நிதி, அம்ரூத் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்), நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாகவும் ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி மற்றும் ஜெர்மானிய வங்கியின் நிதியின் மூலமும் மொத்தம் ரூ. 29,084 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர்வசதி, பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

செங்கல்பட்டு மற்றும் வேலூர் மண்டலங்களில் உள்ள 39 நகராட்சி மற்றும் 6 மாநகராட்சிகளில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம், மூலதன மானிய நிதி, அம்ருட் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்), நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் மொத்தம் ரூ. 7862 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர்வசதி, பாதாள சாக்கடை வசதி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன

இப்பணிகள் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து நடைபெற்று வரும் திட்டப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசித்து அது தொடர்பான முன் தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எம். நாசர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி. கணேசன் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை துணை சபாநாயகர் திரு.கு. பிச்சாண்டி அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் தலைவர்/நிருவாக இயக்குநர் முனைவர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப. அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.சிவராசு, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் கள், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் தலைவர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**